ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 2.1 – மெச்சூது

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_{3}$ராமாநுஜ மஹாதே$_{3}$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 2.1 – மெச்சூது

‡ மெச்சூது சங்கம் இடத்தான் ⋆
நல் வேய் ஊதி ⋆
பொய்ச் சூதில் தோற்ற ⋆
பொறை உடை மன்னர்க்காய் ⋆
பத்தூர் பெறாதன்று ⋆
பாரதம் கைசெய்த ⋆
அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான் ⋆
அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ॥ **2.1.1** ॥

மலை புரை தோள் மன்னவரும் ⋆
மாரதரும் மற்றும் ⋆
பலர் குலைய ⋆
நூற்றுவரும் பட்டழிய ⋆
பார்த்தன் சிலை வளையத் ⋆
திண் தேர்மேல் முன்னின்ற ⋆
செங்கண் அலவலை வந்தப்பூச்சி காட்டுகின்றான் ⋆
அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ॥ **2.1.2** ॥

காயும் நீர் புக்குக் ⋆
கடம்பேறி ⋆
காளியன் தீய பணத்தில் ⋆
சிலம்பார்க்கப் பாய்ந்தாடி ⋆
வேயின் குழல் ஊதி ⋆

வித்தகனாய் நின்ற ⋆
ஆயன் வந்தப்பூச்சி காட்டுகின்றான் ⋆
அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ॥ **2.1.3** ॥

இருட்டில் பிறந்து போய் ⋆
ஏழை வல் ஆயர் ⋆
மருட்டைத் தவிர்ப்பித்து ⋆
வன் கஞ்சன் மாளப் புரட்டி ⋆
அந்நாள் எங்கள் ⋆
பூம் பட்டுக் கொண்ட ⋆
அரட்டன் வந்தப்பூச்சி காட்டுகின்றான் ⋆
அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ॥ **2.1.4** ॥

சேப்பூண்ட ⋆
சாடு சிதறித் ⋆
திருடி நெய்க்காப்பூண்டு ⋆
நந்தன் மனைவி கடை தாம்பால் ⋆
சோப்பூண்டு ⋆
துள்ளி துடிக்கத் துடிக்க ⋆
அன்றாப்பூண்டான் அப்பூச்சி காட்டுகின்றான் ⋆
அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ॥ **2.1.5** ॥

செப்பிள மென்முலைத் ⋆
தேவகி நங்கைக்கு ⋆
சொப்படத் தோன்றித் ⋆
தொறுப்பாடியோம் வைத்த ⋆
துப்பமும் பாலும் ⋆
தயிரும் விழுங்கிய ⋆

அப்பன் வந்தப்பூச்சி காட்டுகின்றான் ⋆
அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ‖ **2.1.6** ‖

தத்துக் கொண்டாள் கொலோ ⋆
தானே பெற்றாள் கொலோ ⋆
சித்தம் அனையாள் ⋆
அசோதை இளஞ்சிங்கம் ⋆
கொத்தார் கருங்குழல் ⋆
கோபால கோளரி ⋆
அத்தன் வந்தப்பூச்சி காட்டுகின்றான் ⋆
அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ‖ **2.1.7** ‖

கொங்கை வன் ⋆
கூனிசொற் கொண்டு ⋆
குவலயத் துங்கக் கரியும் ⋆
பரியும் இராச்சியமும் ⋆
எங்கும் பரதற்கருளி ⋆
வன் கான் அடை ⋆
அங்கண்ணன் அப்பூச்சி காட்டுகின்றான் ⋆
அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ‖ **2.1.8** ‖

பதக முதலை வாய்ப் ⋆
பட்ட களிறு ⋆
கதறிக் கைகூப்பி ⋆
என் கண்ணா ! கண்ணா ! என்ன ⋆
உதவப் புள் ஊர்ந்து ⋆
அங்குறுதுயர் தீர்த்த ⋆

அதகன் வந்தப்பூச்சி காட்டுகின்றான் ⋆
அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ‖ **2.1.9** ‖

‡ வல்லாள் இலங்கை மலங்கச் ⋆
சரந் துரந்த ⋆
வில்லாளனை ⋆
விட்டுசித்தன் விரித்த ⋆
சொல் ஆர்ந்த அப்பூச்சிப் பாடல் ⋆
இவை பத்தும் வல்லார் போய் ⋆
வைகுந்தம் மன்னி இருப்பரே ‖ **2.1.10** ‖

அடிவரவு — மெச்சு மலை காயும் இருட்டில் சேப்பூண்ட செப்பு தத்து கொங்கை பதகம் வல்லாள் அரவணையாய்

மெச்சூது முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்